**செய்தி வெளியீடு எண் : 1428** **நாள் : 17.08.2022**

## <u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (17-8-2022) புதுடில்லியில், மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் மற்றும் மாண்புமிகு இந்திய குடியரசு துணைத் தலைவர் திரு. ஜகதீப் தன்கர் ஆகியோரை சந்தித்த போது, தமிழகத்திலுள்ள மரபு தானியங்களின் தொகுப்பு அடங்கிய பெட்டகத்தை வழங்கினார்.**

### <u>தமிழகத்து மரபு தானியங்களின் தொகுப்பு</u>

ஓடி ஓயாது உழைக்கும் விளிம்பு நிலை மனிதனின் வயிற்றுப் பசியையும், மரத்தின் விளிம்பில் நின்று கொண்டு காடு வளர்க்கும் பணி செய்யும் பறவையின் பசியையும் ஆற்றிய நிலம், 100க்கும் மேற்பட்ட அரிசி வகைகளாலும், பல வகை சிறுதானியங்களாலும் நிறைந்தது தமிழ் நிலம்.

### <u>இந்நிலத்தின் முக்கிய மரபு தானியங்கள்</u>

- மாப்பிள்ளை சம்பா (RED RICE) - சிகப்பு நிறத்தால் ஆண்ட்டி ஆக்சிடண்ட் தன்மையை கொடுத்து நோயின்றி காக்கும் அரிசி.

- குள்ளக்கார் (RICE FOR ANTI & POST-NATAL WOMEN) - பாலூட்டும் பெண்களுக்கும் கருத்தரிக்கும் பெண்களுக்கும் ஊட்டம் தரும் அரிசி.

- கருப்புக்கவுனி (EMPEROR OR FORBIDDEN RICE) - நெடுங்காலம் அரசர்களுக்கு மட்டும் பயிரிடப்பட்ட ஆந்தோசயனைன் நிறைந்த புற்றைத் தடுக்கும் கருப்பு அரிசி.

- சீரகச்சம்பா (AROMA RICE OF ARCOT) - பாலாற்றங்கரையில் பயிராகும் தனித்துவ மணம் கொண்ட சுவைமிக்க அரிசி.

- குடவாழை (RED RICE OF DELTA) – தோலுக்குப் பொலிவு அளிக்கும் மரபு சிகப்பு அரிசி இது.

## அருந்தானியங்கள்

- கம்பு (PEARL MILLET) - அருந்தானியங்களின் அரசன் இவன். அரிசியைவிட 8 மடங்கு அதிக இரும்புச்சத்து கொண்ட சர்க்கரை நோயாளிக்கான லோ கிளைசிமிக் அரிசி.

- வரகு (KODO MILLET) - தமிழ் மூதாட்டி அவ்வை விரும்பிக் கேட்டு உண்ட மெல்ல சர்க்கரை தரும் மரபு தானியம்.

- சாமை (SMALL MILLET) - பழங்குடி மக்கள் பயிராக்கி படைத்திடும் மருத்துவ குணமிக்க சிறுதானியம்.

- தினை (FOXTAIL MILLET) - கண்ணுக்கும் குழந்தைக்கும் நலம் தரும் பொன்னிற தானியம்.

- கேழ்வரகு (FINGER MILLET) - இரும்பும் கால்சியமும் நிறைந்த, தாய்ப்பாலுக்கு அடுத்ததாக தரப்பட வேண்டிய முதல் திட உணவு.

••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in